முருகப்பெருமான் துணை

**மகான் சிறுதொண்ட நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.10.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞானகுருவே கலியிடர் வெல்ல
ஞானபண்டிதன் அவதாரமாக
ஞானம் உலகுக்கு அருளுகின்ற
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது துலைதிங்கள்
வரங்களென சூலதிகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 03 ம் நாள், 20.10.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சிறுதொண்ட நாயனாரும்
அறிவிப்பேன் உலகநலம் பெற
வாசி வெல்லும் ஞானம் பெற
வறுமை வெல்லும் அன்னதான
4. அன்னதான சேவை ஆற்றி
அறிவிப்பேன் தருமவான்களாக
மண்ணுலகினில் அடையாளம் காண
மகான் அரங்கப் பெருமானின்
5. பெருமானின் மாதருமம் காத்து
பொருளுதவி செய்து வந்தாலே
பெருமை மிக்க ஞானவானெனும்
புதுமையும் அடையாளமும் கூடி
6. கூடியே ஆறுமுகப் பெருமானால்
குருவருள் கொண்ட ஆன்மா என
தேடியே சக்தி நிலை கூடியே
திருவருளாக முருகப் பெருமானே வழிநடத்த

7. வழிநடத்த வாசி வசமாகுமப்பா
வணங்கி உயிர்கொலை நீக்கிட
அழியாமை கண்டும் சிறந்தும்
அகிலம் மாற்றும் அற்புதம்படைப்பர்
8. படைக்கவே ஞான வழிகளும்
பண்பான வாழ்க்கை முறைகளும்
தடையின்றி அரங்கன் வரமாகத்
தரவே மாற்றம் பல கண்டு
9. கண்டுமே கலியுகம் தன்னை
கந்தவேலன் ஆளுமை தரும்
தொண்டும் தயவும் நிறைந்த
தூய ஞானயுகமாக மாற்றுவர்
10. மாற்றம் தரும் அரங்க ஞானி
மகிமை அறிந்து மக்கள்வர
ஆற்றல் தரும் அன்னதானமாம்
அறமதையும் காத்து வளர்த்துவர
11. வருகவே எங்கும் ஞானிகள் படை
வல்லமை கூடி உலகமாற்றம்
ஆறுமுகனார் வெளிப்பட நிகழும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—